மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண்.178 /2017

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் பி.வா.சா.1.

---

பெயர். –ஆ.தங்கவேல்.

த/பெ. –

கிராமம் –

தொழில் –

தாலுகா –

வயது –

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 07–ஆம் நாள் நிருபணவாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.–

1) நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.அதை பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 04.11.1978 ம்தேதிய கிரையப்பத்திரத்தின் சார்பதிவாளர்அலுவலக சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 1990–1991,1991–1992, 1994–1995, 1998–1999,2011–2012, 2012–2014 மற்றும்2016–2017 ஆகிய வரி விதிப்புகாலங்களில் க.எண்.2/36 வீட்டிற்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் எண்ணம் 7 அசல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 03.06.2017 மற்றும் 07.06.2023 ம்தேதிய பிரதிவாதி வீட்டிற்கு உண்டான மின் இணைப்பு எண்.301–கான மின் கட்டண ரசீது எண்ணம் 2 அசல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 30.06.2011 ம்தேதி பிரதிவாதி தனது மகள் கோமதியம்மாளுக்கு கிரையம் செய்துகொடுத்த கிரையப்பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 29.08.2017 ம்தேதி வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 11.09.2017 ம்தேதி பிரதிவாதி அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | பதில் அறிவிப்பை வாதியின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | |
|---|---|
| 8 | நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 9 | நீதிமன்ற ஆணையாளரின் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 10 | நீதிமன்ற ஆணையாளர் தனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

குறுக்கு விசாரணை – வாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)A.முகமது சாதிக்உசேன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
07.11.2023.